முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

நாள். 01.12.2025.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

**அசல் வழக்கு எண். 119/2025**

2025-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 01ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சத்யா | மாவட்டம் | : | திருச்சி |
| க/பெ | | பாஸ்கரன் | வயது | : | 63 |
| ஊர் | : | எடமலைப்பட்டி | தொழில் | : | இல்லத்தரசி |

**வா.சா. 1 (சத்யா): வாதி தரப்பில் முதல் சாட்சியின் முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் **இரண்டாம் வாதி ஆவேன். வாதி தரப்பு முதல் சாட்சி (வா.சா.1) ஆவேன்.** நான் ஏற்கனவே எனது பிரமாண வாக்கு மூலத்தை தாக்கல் செய்தேன். இன்று ஆவணங்கள் குறியீடு செய்ய வந்துள்ளேன்.

**கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது**

1. 10.12.2024 தேதியிட்ட 16.10.2014 தேதியன்று நித்தியா இறந்ததற்கான இறப்புச் சான்று அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 12.04.2024 தேதியில் குமணன் இறந்ததற்கான இணையம் மூலம் பெறப்பட்ட இறப்புச்சான்று கணினி நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. 03.12.2024 தேதியிட்ட 21.11.2024 தேதியன்று ஹரிபிரசன்னா இறந்ததற்கான இணையம் மூலம் பெறப்பட்ட இறப்புச் சான்று கணினி நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. 15.12.2024 தேதியிட்ட குமணன் என்பவரின் இணையம் மூலம் பெறப்பட்ட வாரிசுகள் சான்றின் கணினி நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5. 01.10.2012 தேதியிட்ட ஹரிபிரசன்னா என்பவர் மனோன்மனி என்பவரிடம் கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தின் இணையம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6. 25.02.2025 தேதியிட்ட லட்சமிகாந்தம் என்பவர் இறந்ததற்கான இணையம் மூலம் பெறப்பட்ட இறப்புச் சான்று கணினி நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
7. 16.04.2025 தேதியிட்ட லட்சமிகாந்தம் என்பவரின் இணையம் மூலம் பெறப்பட்ட வாரிசு சான்று கணினி நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எனது தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்**

**குறுக்கு விசாரணை**

1. நாங்கள் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் எனது தம்பி மகன் இறந்துவிட்டதால் அவருடைய வாரிசுதாரர்கள் என்று விளம்புகை செய்ய தாக்கல் செய்துள்ளேன். எனது தம்பி மகன் பெயர் என்னவென்றால் ஹரிபிரசன்னாவாகும். எனது தம்பி பெயர் என்னவென்றால் குமணன் ஆகும். அவரும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். குமணனின் மனைவி யார் என்றால் நித்தியாவாகும். அவரும் இறந்துவிட்டார். குமணனுக்கும் அவருடைய மனைவி நித்தியாவுக்கும் எத்தனை வாரிசுகள் என்றால் ஒரே வாரிசு அவர் ஹரிபிரசன்னாவாகும். இறந்த குமணனுக்கு அப்பா உயிருடன் உள்ளாரா என்றால் உள்ளார். அவருடைய பெயர் வெங்கடபதி ஆகும். அவர்தான் இந்த வழக்கில் முதல் வாதி என்று சொன்னால் சரிதான். இறந்துபோன குமணனின் தாயார் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. அவர் பெயர் லட்சுமிகாந்தம் ஆகும். அவரின் இறப்புச் சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இறந்துபோன ஹரிபிரசன்னாவின் தாயார் நித்தியாவின் பெற்றோர்கள் உயிருடன் இருக்கிறார்களா என்றால் அவரின் தாயார் இறந்துவிட்டார். அவரின் அப்பா பற்றி தெரியவில்லை. அவர்கள் இருவருக்கும் விவாகரத்து ஏற்பட்டிருந்தது. மேற்படி ஹரிபிரசன்னாவின் தாயாரின் பெற்றோர்கள் பற்றி வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்று தெரியுமா என்றால் இல்லை. இறந்துபோன ஹரிபிரசன்னாவின் தந்தை குமணன் என்பவரின் உடன்பிறந்தவர்கள் யார் என்றால் நான், மூன்றாம் வாதி வெங்கடலட்சுமி, 4ம் வாதி வெண்ணிலா, 5ம் வாதி பாலாஜி ஆகிய நால்வர் ஆகும். எங்களைத் தவிர வேறு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். ஹரிபிரசன்னாவின் தந்தை குமணனின் வாரிசு சான்று இவ்வழக்கில் தாக்கல்செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை இத்துடன் முடிவடைகிறது.**

**மறுவிசாரணை**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2025.12.01 17:30:16 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு